NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 12 August 2022

# வீதிகளில் படுத்துறங்குவோர் விகிதம் குறைந்தது

கொவிட்-19 நெருக்கடிநிலையின் போது மற்ற நாடுகளில் வசிப்பிடம் இன்றி தவிப்போர் எண்ணிக்கை அதிகரித்த நிலையில், சிங்கப்பூரில் அத்தகையோரின் எண்ணிக்கை கடந்த ஆண்டு சற்று குறைந்தது. இருப்பினும், வசிப்பிடம் இல்லாது வீதிகளில் படுத்துறங்கிய பலர் தற்காலிக இருப்பிடங்களில் தங்கியதால் பொது இடங்களில் அவர்களை அவ்வளவாகப் பார்க்க முடியாமல் போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வசிப்பிடம் இல்லாதோர் எண்ணிக்கை கடந்த ஆண்டு 1,036ஆகப் பதிவானது. 2019ஆம் ஆண்டை விட இது ஏழு விழுக்காடு குறைவு.

சிங்கப்பூரில் வசிப்பிடம் இன்றி தவிப்போரின் எண்ணிக்கையைக் கண்டுபிடிக்க 2019ஆம் ஆண்டில் முதல்முறையாகக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கடந்த ஆண்டு இரண்டாவது கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், வசிப்பிடம் இல்லாமல் வீதிகளில் படுத்துறங்கியோர் எண்ணிக்கை கடந்த ஆண்டு 41 விழுக்காடு சரிந்தது. ஆனால், அதே காலகட்டத்தில் தற்காலிக வசிப்பிடங்களில் வசிப்போர் எண்ணிக்கை 65லிருந்து 420ஆக அதிகரித்தது. லீ குவான் இயூ பொதுக் கொள்கை ஆய்வுப் பள்ளியின் மூத்த ஆய்வாளர் டாக்டர் இங் கோக் ஹோவின் தலைமையில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரை 200 தொண்டூழியர்களின் உதவியோடு ஆய்வாளர் குழு, இந்த நடவடிக்கையில் இறங்கியது.

வசிப்பிடமில்லாதோருக்கு சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சு வழங்கிய தற்காலிக வசிப்பிடங்களில் வசிப்போரின் எண்ணிக்கை கடந்த ஆண்டு முதல்முறையாகக் கணக்கெடுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இதற்கிடையே, சிங்கப்பூரில் வசிப்பிடம் இல்லாதோரில் இரு புதிய பிரிவினர் இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

அவர்களில் கொவிட்-19 நெருக்கடிநிலை காரணமாக வேலை இழந்து வாடகை செலுத்த முடியாமல் வீதிகளில் படுத்துறங்கி யோரும் அடங்குவர்.

சிலருக்கு உறவினர்கள் அல்லது நண்பர்கள் தங்கள் வீடுகளில் தங்க இடம் கொடுத்தனர். ஆனால், கொவிட்-19 நெருக்கடிநிலை காரணமாக வீட்டிற்கு வரக்கூடிய விருந்தினர்கள் எண்ணிக்கைக்கு வரம்பு விதிக்கப்பட்டதால் அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்டோரில் 30 வயதிலிருந்து கிட்டத்தட்ட 80 வயது வரையிலான ஆண்களும் பெண்களும் அடங்குவர்.




கொவிட்-19 நெருக்கடிநிலை காரணமாக வேலை இழந்து வாடகை செலுத்த முடியாமல் சிலர் வீதியில் படுத்துறங்கினர்.
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.